## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 286/2009

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 15.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சிற்றம்பலம் Father's Name : சுப்பு உடையார்

துவக்க நேரம்: 03.41 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

1. நான் தற்பொழுது எங்கு வசித்து வருகிறேன் என்றால் புளியங்குறிச்சி, காட்டுக்கொட்டையில் வசித்து வருகிறேன். எனது மகன் வேலையின் காரணமாக சென்னையில் வசித்து வருகிறார். நான் எவ்வளவு நாட்களாக புளியங்குறிச்சியில் வசித்து வருகிறேன் என்றால் சுமார் 12 வருடங்களாக வசித்து வருகிறேன். எனது மகன் சுமார் 10 வருடமாக சென்னையில் வசித்து வருகிறார். எனது ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையில் புளியங்குறிச்சி விலாசம்தான் உள்ளது என்றால் சரிதான், குடும்ப அட்டையில் முதலில் வேப்பம்பூண்டி விலாசம் இருந்தது அதன்பின்னிட்டு நான் புளியங்குறிச்சி விலாசத்திற்கு மாற்றிக்கொண்டேன்.

2. வேப்பம்பூண்டி கிராமத்தில் எனக்கு குடியிருப்போ, விவசாயமோ இல்லை என்றால் குடியிருப்பு இல்லை ஆனால் வேப்பம்பூண்டி கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி கிராமத்தில் விவசாயம் செய்து வருவதற்காக கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வேப்பம்பூண்டி

கிராமத்தில் எனக்கு விவசாயம் எதுவும் இல்லை என்றாலும் அவ்வாறு விவசாயம் செய்வதற்கான நிலத்தின் அடங்கல், அனுபவச் சான்று ஆகியவைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு உண்மையில் நான் விவசாயம் செய்து வந்தால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் தாவா சொத்திற்கான வாதி தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணம் செல்லாது என்று எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல, நடவடிக்கை எடுத்துள்ளோம். கடந்த 06.08.2009 தேதியில் வாதி தாவா சொத்தை எனது சகோதரர் பொன்னுசாமியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அந்த ஆவணம் (வா.த.சா.ஆ.1) தலைவாசல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் 17.07.2009 ஆண்டு எனது தாயார் 6-ம் பிரதிவாதியான எனது சகோதரருக்கு கிரைய ஆவணம் (வா.த.சா.ஆ.2) கொடுத்துள்ளார் என்றால் எனது சகோதரர் எனது தாயாரை அடித்து வற்புறுத்தி மேற்படி ஆவணத்தை எழுதி வாங்கிக்கொண்டார். அவ்வாறு எனது தாயாரை அடித்து கிரையம் பெற்றது தொடர்பாக எந்த நடடிவக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல, எனது தாயார் அதுகுறித்து நீதிமன்றத்தில் சாட்சி அளித்துள்ளார். நான்சொல்வதுபோல் எனது தாயார் எந்த சாட்சியும் அளிக்கவில்லை என்றாலும் அவ்வாறு நான் கற்பனையாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கில் வாதி இளையராஜா தரப்பினரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 4-வது பத்தியில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல. நானும், வாதியும் வெவ்வேறான

சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதி இளையராஜாவுக்கு தாவா சொத்தை தவிர வேப்பம்பூண்டி கிராமத்தில் வேறு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் ஊர் ஊராட்சி மன்ற தலைவர் ராமு உடையார் எனது பங்காளி என்றால் சரியல்ல, எனக்கு சித்தப்பா ஆவார். அவரது மகன் பாஸ்கரும் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். வாதிக்கு நான்கு வாரிசுகள் என்றால் சரிதான்.வாதி ஏழ்மையானவர் என்றாலும் எனது சகோதரரிடமிருந்து தாவா சொத்தை வாதி கிரையம் பெற்றதை எனக்கு பிடிக்காததாலும் எனக்கு ஊரில் ஆள்பலம் உள்ளதாலும் தாவா சொத்தின் வாதியின் அனுபவத்தை இடையூறு செய்ததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்தானது வாதிக்கு கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றாலும் எனது பதிலுரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்தில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்று கூறியுள்ளது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 3-ம் பிரதிவாதி மகேந்திரனுக்கு 20.01.2005 தேதியிட்ட இரண்டு தானசெட்டில்மெண்ட் ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டது என்று கூறியுள்ள நிலையில் அவ்வாறு தானசெட்டில்மெண்ட் தேதிக்குபிறகு 3-ம் பிரதிவாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வருவதற்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன், 3-ம் பிரதிவாதிக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் ஆவணம்மூலம்தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது.

6. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.த.சா.ஆ.3, 4 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள அ.வ.எண்.205/2009 என்ற வழக்கில் வாதி இளையராஜா கிரையம் பெற்ற ஆவணமும், 6-ம் பிரதிவாதி கிரையம்பெற்ற ஆவணமும் செல்லாது என்று எந்த

பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல, பரிகாரம் கேட்டுள்ளோம். மேற்படி அ.வ.எண்.205/2009-ன் வழக்குரை மற்றும் அதில் உள்ள ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்தால் எனக்கு விரோதமாக அமையும் என்பதால் அந்த ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

7. அ.வ.எண்.205/2009 என்ற வழக்கில் நானும், எனது மகனும் வாதிகள் என்றாலும், எனது சகோதரரும், தாயாரும் பிரதிவாதிகள் என்றாலும் சரிதான். மேற்படி வழக்கை எங்கள் குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து தாக்கல் செய்து ஒரு தவறான தீர்ப்பை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.3, 4 ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1,2 ஆவணங்கள் தற்பொழுதுவரை நடைமுறையில் உள்ளது என்றாலும் தாவா சொத்தின் அனுபவம் வாதியிடம் உள்ளது என்றாலும் சரியல்ல, நாங்கள்தான் அனுபவித்தில் இருந்து வருகிறோம். வருவாய் ஆவணங்கள் எனது பெயரிலும், எனது மகன் பெயரிலும் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் வாதிதான் தாவா சொத்தின் அனுபவ சுவாதீனம் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 04.19 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.286/2009, Dt.15.04.2026.